# මැතිවරණ කොමිෂන් සභාව
# தேர்தல் ஆணைக்குழு

පොදු කාර්යාලය : 011-2868441, 2868442, 2868443
பொது அலுவலகம்
General Office
ෆැක්ස්/தொலைநகல்/Fax:011-2868426
*Web: www.elections.gov.lk* *e-mail: info@slelections.gov.lk*

මැතිවරණ කොමිෂන් සභා කාර්යාලය
සරණ මාවත, රාජගිරිය (10107)
தேர்தல் ஆணைக்குழு அலுவலகம்
சரண மாவத்தை, இராஜகிரிய *(10107)*


මගේ අංකය: எனதுஇல. : EC/LI/RPP/01/Circulars
ඔබේ අංකය: உமதுஇல.:
දිනය: திகதி: 2023.11.15

**சுற்றறிக்கை இல.- 01**

**முக்கிய கவனத்திற்கு**

அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்களுக்கும்,

**அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குக் கூற்றுக்கள் (1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவு)
2. கட்சியின் யாப்புத் திருத்தங்களை மேற்கொள்ளல், உத்தியோகத்தர் சபை அல்லது முகவரி மாற்றமடைதல் (1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு)
3. கட்சியின் அரசியற் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள்
4. தேர்தல் ஆணைக்குழுவுடனான தொடர்பாடல்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக அரசியற் கட்சிகளின் செயலாளர்களுடனான கலந்துரையாடல்களின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கும் இதற்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ள கடிதங்களுக்கும் மேலதிகமாக.

**1. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டுக் கணக்குக் கூற்றுக்கள் (1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவு)**

1.1 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவிற்கமைய அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி ஒவ்வொன்றினாலும் பதிவு செய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்பட்ட தமது கட்சியின் ஆண்டுக் கணக்குக் கூற்றின் பிரதியொன்றை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அதன்போது கணக்காய்வாளர் தேவையான அனைத்து ஆவணங்களும் கணக்குகளைப் பரிசோதித்த பின்னர் அக்கணக்குகள் உள்ளபடியானதும் நியாயாயமானதுமான ஒரு நிலைமையை பிரதிபலிக்கின்றதா என்பதையும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ளதென்பதையும் குறிப்பிட்டு கணக்காய்வு அபிப்பிராயத்தைச் சமரப்பித்தல் கட்டாயமானதாகும். (இதனுடன் தொடர்புடைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட கணக்காய்வுக் கணக்குக் கூற்றொன்றின் மாதிரியொன்று EC/LI/02/01/(2022) ஆம் இலக்க, 2023.02.15 ஆம் திகதிய கடிதத்துடன் தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தர விரும்புகின்றேன்.)

1.2 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் கணக்காய்வுக்குரிய நிதியாண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையுமாயின், அக்கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்று உடனடுத்த ஆண்டின் ஏப்பிரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு கட்சியொன்றின் கணக்காய்வுக்குரிய நிதியாண்டு மார்ச் மாதம் 31 ஆம்


සභාපති
தவிசாளர்
දුරකථන/தொலைபேசி: 011-2868444
ෆැක්ස්/தொலைநகல்:011-2868445
*E-mail:comelesl@sltnet.lk*

මැතිවරණ කොමසාරිස් ජනරාල්
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
දුරකථන/தொலைபேசி:011-2885207
ෆැක්ස්/தொலைநகல்:011-2885208
*e-mail: cgelection@elections.gov.lk*

අතිරේක මැතිවරණ කොමසාරිස් (නීති හා විමර්ශන)
மேலதிக தேர்தல்கள் ஆணையாளர்
(சட்டம் மற்றும் விசாரணை)
දුරකථන/தொலைபேசி: 011-2867471
ෆැක්ස්/தொலைநகல்/Fax : 011-2868448

திகதியன்று முடிவடையுமாயின், கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்று அதே ஆண்டின் யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

1.3 கட்சியொன்றுக்கு அந்தக் காலப் பகுதியினுள் தமது கணக்குக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முடியாத விதத்தில் தடங்கலேதும் காணப்படுமாயின், ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களைக் குறிப்பிட்டு 14 நாட்களுக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூல கோரிக்கையொன்றை முன்வைப்பதனூடாக 30 நாட்கள் வரை கணக்குக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு அக்காலப் பகுதியும் போதுமானதாக இல்லாவிடின் மாத்திரம் மேலும் ஒரு முறை மாத்திரம் 14 நாட்களுக்கு முன்னர் கோரிக்கையொன்றை முன்வைப்பதன் மூலம் மேலதிகமாக 30 நாட்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இருப்பினும், ஆணைக்குழுவினால் கணக்குக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படும் முழுமையான காலம் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்குக் கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டிய திகதியிலிருந்து கணக்கிடப்படும் அதிகபட்சம் 60 நாட்களுக்கு உட்பட்டதாகும்.

1.4 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியாண்டு முடிவடையும் திகதியிலுள்ளவாறான குறித்த காலப்பகுதியினுள் கணக்குக் கூற்றுக்களை தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்படி கையளித்தல் வேண்டுமென்பதோடு அவ்வாறு செய்யத் தவறும் கட்சிகளின் அங்கீகாரத்தை 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 9(3) ஆம் பிரிவிற்கிணங்க மறுஅறிவித்தல் கொடுக்கப்படாத நிலையில் முடிவுறுத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமாதலால், கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்களை உரிய காலப்பகுதியினுள் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அவசியமானது என்பதை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.

1.5 எனவே இது சம்பந்தமாக தங்களது கட்சியின் பொருளாளரையும் சம்பந்தப்பட்ட அலுவலர்களையும் அறிவுறுத்துமாறு மேலும் தயவுடன் வேண்டுகின்றேன்.

2. கட்சியின் யாப்புத் திருத்தங்களை மேற்கொள்ளல், உத்தியோகத்தர் சபை அல்லது முகவரி மாற்றமடைதல் (1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு)

2.1 அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றில் யாப்புத் திருத்தம் அல்லது உத்தியோகத்தர் சபை மாற்றம் இடம்பெறுமாயின், அது பற்றிய தகவல்களை குறித்த விடயம் மேற்கொள்ளப்பட்டு ஒரு மாத காலத்தினுள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டுமென்பதோடு, ஏதேனும் தவிர்க்க முடியாத ஒரு காரணத்தினால் அவ்வாறான மாற்றங்கள் பற்றி அறிவிப்பதற்கு தாமதம் ஏற்படுமாயின், அது பற்றி தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்து சட்டத்தின் 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேலதிக காலப்பகுதியொன்றை கோர வேண்டும்.

2.2 கட்சியின் உத்தியோகத்தர் சபை அல்லது யாப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுமாயின், அந்த விடயம் கட்சியின் யாப்புக்கிணங்க மேற்கொள்ளப்பட்டதென்பதை உறுதிப்படுத்துவதற்காக குறித்த கட்சி யாப்பின் பிரிவுகளையும் குறிப்பிட்டு கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகள், வரவுப் பதிவேட்டுப் பிரதிகள் மற்றும் அதனோடிணைந்த ஏனைய அனைத்து எழுத்தாவணங்களையும் கட்சியின் செயலாளர் சமர்ப்பித்தல் வேண்டும்.

2.3 கட்சியின் உத்தியோகபூர்வ முகவரியில் மாற்றம் ஏற்பட்டிருப்பின், அது பற்றி கட்சியின் குறித்த செயற்குழுவின் (கட்சியின் யாப்புக்கமைய கட்சியின் தீர்மானமெடுக்கும் அதிகாரம்கொண்ட கட்டமைப்பு) இணக்கப்பாட்டின் பேரில் செயலாளரினாலும் தவிசாளரினாலும் தவிசாளர் இல்லாத சந்தர்ப்பங்களில் செயலாளரும் கட்சித் தலைவரும் ஆகிய இருவரதும் கையொப்பத்துடனும் அறிவிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு; செயலாளரின் முகவரி மாற்றமடையும் பட்சத்தில் அது பற்றி செயலாளரினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். குறித்த கடிதத்தின் பிரதிகளை கட்சியின் தவிசாளருக்கும்/ கட்சியின் தலைவருக்கும் கட்சியின் செயற்குழுவுக்கும் அனுப்புதல் வேண்டும்.

2.4 கட்சியின் உத்தியோகத்தர் சபையை நியமித்துக்கொள்வதற்கான வருடாந்த மாநாடு அல்லது குறித்த அதிகாரத்தைக் கொண்ட குழுவின் கூட்டம் இரகசிய கூட்டமொன்றாக இருத்தலாகாது. வருடாந்த மாநாட்டை நடத்துதல் சம்பந்தமாக கட்சி அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் விடுப்பதனை பத்திரிகை அறிவித்தல் மற்றும் ஊடக அறிவித்தல் மூலம் பிரசித்தப்படுத்தி அது பற்றி தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அறிவித்தல் வேண்டும். கட்சி உட்பூசல்கள்/பிரச்சினைகள் நிலவும் சந்தர்ப்பங்களில் ஆணைக்குழுவின் ஆலோசனைக்கிணங்க தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அத்தகைய கூட்டங்களை அவதானிப்பதற்கு நடவடிக்கை எடுப்பர்.

2.5 கட்சியின் செயலாளர் தற்காலிகமாக பதவி விலகும்போது செயலாளரின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு பதிற்கடமையாற்றும் தற்காலிக செயலாளர் ஒருவர் நியமித்துக்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய தற்காலிக நியமனம் தொடர்பாக கட்சியின் செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும். (அதனுடன் சம்பந்தப்பட்ட கூட்ட நிகழ்ச்சிக்குறிப்பு மற்றும் கையொப்பங்கள் அடங்கிய ஆவணங்களுடன்)

2.6 கட்சியின் செயலாளர் தற்காலிகமாக பதவி விலகும் சந்தர்ப்பத்தில் செயலாளரின் கேட்டு விலகல் கடிதத்தை அதனுடன் தொடர்புடைய கூட்ட நிகழ்ச்சிக்குறிப்பு மற்றும் வரவுப் பதிவேட்டுடன் நியமிக்கப்படும் புதிய செயலாளரின் நியமனம் சம்பந்தமாக கட்சியின் தவிசாளரதும் புதிய செயலாளரதும் கையொப்பத்துடனான கடிதமொன்றின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். (நியமனங்களின் சட்டரீதியான தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக)

2.7 கட்சியின் உத்தியோகத்தர் சபையின் பெயர்ப்பட்டியலொன்றை வருடத்திற்கு ஒரு தடவையாவது அனுப்புதல் வேண்டுமென்பதோடு அந்த உத்தியோகத்தர் சபை பெயர்ப்பட்டியலில் குறைந்தபட்சம் பெண் பிரதிநிதித்துவத்திற்காக பெண் ஒருவரையாவது உட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2.8 கட்சிக் கூட்டங்களை நடத்துதல் சம்பந்தமாக அறிக்கையிடும்போது அக்கூட்டத்துடன் தொடர்புடைய கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பையும் வரவுப் பதிவேட்டையும் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

2.9 தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கும் அனைத்து எழுத்தாவணங்களையும் அறிமுகக் கடிதமொன்றுடன் சரியான முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதேபோல் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் ஆவண்ஙகளின் மூலப்பிரதிகள் எக்காரணங்கொண்டும் கோப்பிலிருந்து பிரித்தெடுத்து தங்களுக்கு ஒப்படைக்கப்பட மாட்டாது.

## 3. கட்சியின் அரசியற் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள்

3.1 அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளும், அரசியற் கட்சியொன்றாக தொடர்ச்சியாக இயங்கியதை உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிலும் மேற்கொள்ளப்பட்ட அரசியற் செயற்பாடுகள் பற்றி சமர்ப்பிக்கக்கூடிய அனைத்து ஆவணங்களையும் அது பற்றிய அறிக்கையையும் உடனடுத்த ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கட்சியின் செயலாளர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டுமென்பதோடு, குறித்த அறிக்கைகளை உரிய காலப்பகுதி முடிவடைவதற்குள் அனுப்புதல் வேண்டுமென்ற விடயத்தை தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.

3.2 அத்தகவல்களில் குறித்த அரசியற் கட்சியின் வருடாந்த மாநாட்டை நடத்துதல், மாவட்ட மாநாடுகளை நடத்துதல், கட்சியோடு இணைந்த அமைப்புக்களின் (தொழில், இளைஞர் மற்றும் மகளிர் முதலான) செயற்பாடுகள், தேசிய மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் ரீதியான/ சட்டம் மற்றும் யாப்பு ரீதியான/ சமூக மற்றும் சூழல் சார்ந்த செயற்பாடுகள், பொதுக் கூட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், சிறிய கூட்டங்கள் ஊடாக கட்சியினால் மேற்கொள்ளப்படும் பொது மக்கள் மற்றும் அங்கத்தவர்களுக்கு விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகள், அச்சு/ இலத்திரனியல் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாக மேற்கொள்ளப்படும் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகள், ஏனைய அரசியற் கட்சிகளுடன் கூட்டணி சேர்தல் போன்ற விடயங்கள் மற்றும் அரசியற் கட்சிகளினால் முக்கியமானதெனக் கருதப்படும் ஏனைய செயற்பாடுகள் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதனைக் கவனத்திற்கொள்ளவும்.

## 4. தேர்தல் ஆணைக்குழுவுடனான தொடர்பாடல்

4.1 கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவுடனான தொடர்பாடல் நடவடிக்கைகளை கட்சியின் செயலாளர் மேற்கொள்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

4.2 கட்சியினால் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களின் சட்டரீதியான தன்மையானது கட்சியின் செயலாளரின் கையொப்பத்துடன் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப 1.1, 2.2, 2.3, 2.5, 2.6 மற்றும் 3.1 ஆகிய பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளினால் கையொப்பமிடப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும்.

4.3 கட்சியின் செயலாளரினால் தபால் மூலம் அனுப்பப்படும் எழுத்தாவணங்கள் மற்றும் கட்சியின் செயலாளர் நேரில் வந்து தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கும் எழுத்தாவணங்கள் தவிர

ஏனைய தூதேவலாளர்கள் (நிரந்தர முகவர்) ஊடாக அத்தகைய ஆவணங்களை சமர்ப்பிப்பதாயின், குறித்த நபர்கள் தொடர்பாக ஆணைக்குழுவுக்கு முன்னரே எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

4.4 அநேகமான கட்சிகளின் எழுத்தாவணங்களைப் பரிமாறிக்கொள்ளும் முகவரியும் தொலைபேசி இலக்கங்களும் தொடர்பில் குறைபாடுகள் காணப்படுவதாக, அவை பயன்பாட்டில் இல்லையென்ற விடயம் எழுத்தாவணங்களைப் பரிமாறிக்கொள்ளும் மற்றும் தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு அறியக் கிடைத்துள்ளது. அவ்வாறு கட்சி அலுவலக முகவரி, செயலாளரின் முகவரி, அலுவலக தொலைபேசி இலக்கங்கள் மற்றும் செயலாளரின் தொலைபேசி இலக்கங்கள் தற்போது தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள தகவல்களுக்கமைய சரியானதாக உள்ளதா என்பதைப் பரீட்சித்து கூடிய விரைவில் இற்றைப்படுத்தி அனுப்புமாறு அறியத் தருகின்றேன். அத்துடன் செயலாளருடன் தொடர்புகொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் தகவல் கொடுப்பதற்கு கட்சியின் உத்தியோகத்தர் சபையின் தொலைபேசி இலக்கங்கள் மற்றும் முகவரிகளுடனான ஆவணமொன்றை தேர்தல் ஆணைக்குழுவுக்கு தயவுசெய்து சமர்ப்பிக்கவும்.

4.5 கட்சியின் கடிதத் தலைப்பில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அல்லது புதிய முகவரி அச்சிடப்பட்ட கடிதத்தலைப்பு பயன்படுத்தப்படுமாயின் அது சம்பந்தமாகவும் ஆணைக்குழுவுக்கு பழைய முகவரி அச்சிடப்பட்ட கடிதத்தலைப்புடனான கடிதமொன்றினூடாக செயலாளரினால் ஆணைக்குழுவுக்கு முற்கூட்டியே அறிவிக்கப்படுதல் வேண்டும்.

4.6 தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கு எழுத்து மூலம் அறிவிப்பது தவிர சில அவசர அறிவித்தல்களை மேற்கொள்வதற்கு 071-6639444 என்ற உத்தியோகபூர்வ WhatsApp தொலைபேசி இலக்கம் பயன்படுத்தப்படுகிறது. EC-Political parties எனும் பெயரில் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் செயலாளர்கள் உள்ளடங்கிய குழுமமொன்று (group) பேணி வரப்படுகிறது. அதற்காக கட்சிச் செயலாளர்களின் WhatsApp இலக்கங்களை ஆணைக்குழுவுக்கு வழங்குவதன் மூலம் தொடர்பாடல் எளிதானதாகும் என்பதுடன், கட்சிச் செயலாளர் பதவியில் மாற்றம் ஏற்படும்போது புதிய செயலாளரின் தகவல்களுடன் அவரது WhatsApp தொலைபேசி இலக்கத்தையும் பெற்றுத் தருமாறு வேண்டப்படுகிறது.

4.7 தாங்கள் நேரடியாக கையளிக்கும் ஆவணங்களை தேர்தல் ஆணைக்குழுவின் வளவில் கீழ் மாடியில் அமைந்துள்ள வரவேற்புக் கருமபீடத்தில் மாத்திரம் கையளித்து பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ள முடியுமென்பதோடு, நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளில் கையளித்து பற்றுச்சீட்டு அல்லது கையேற்றமைக்கான உறுதிப்படுத்தல்களைக் கோர வேண்டாமென்று மேலும் அறிவிக்கப்படுகிறது.

4.8 இந்த 4 ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தேர்தல் ஆணைக்குழு அரசியற் கட்சிகளுடன் பேணிவரும் தொடர்பாடலை மேலும் முறைவலுப்படுத்தும் நோக்கில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளாகும்.

5. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இலக்கம்: EC/PI/1/43/(iii) ஆம் இலக்க, 2020.10.03 ஆம் திகதிய சுற்றறிக்கை இத்தால் இரத்துச்செய்யப்படுவதுடன், இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் **2023.10.01 ஆம் திகதி முதல் அமுலுக்கிடப்படுகின்றதென்பதை** தயவுடன் அறியத் தருகின்றேன்.

இது தொடர்பில் கூடுதல் முக்கியத்துவமளித்து நடவடிக்கை மேற்கொள்வீர்களென்று கருதுகின்றேன்.

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்